# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை : திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 11 /2017**

திரு. M. அய்யரு,
த/பெ மொட்டையன்,
1C, மைனர் தோப்பு,
தெற்கு தெரு, பழங்கா நத்தம்,
மதுரை – 3 . . . மேல்முறையீட்டாளர்
(திரு. M. அய்யரு)

எதிர்

1) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே. புதூர், மதுரை – 625 007.

2) செயற் பொறியாளர்/இ&ப/திருமங்கலம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
கே. புதூர், மதுரை – 625 007. ––– எதிர்மனுதாரர்கள்
(திரு. R. முத்துராமலிங்கம், உதவி செயற்பொறியாளர்/கப்பலூர்)

**கேட்புரை நாள் : 12.4.2017**

**ஆணை நாள் : 11.07.2017**

திரு. M. அய்யரு, த/பெ மொட்டையன், பழங்கா நத்தம், மதுரை அவர்களின் 30.1.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 11/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.4.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

(i) 2003 முன்னுரிமை அடிப்படையில் அவருக்கு மின்இணைப்பு வேண்டும்.

(ii) மதுரை மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணை ரத்து செய்யப்படவேண்டும்.

2. **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரின் மனைவி திருமதி. பேச்சியம்மாள் அவர்களின் பெயரில் சர்வே எண்.129/1Aயில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டிய விண்ணப்பம் செயற்பொறியாளர்/மேற்கு/அரசரடி கோட்டத்தில் வ.எண்.057/02–03 நாள் 11.2.2003 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.2 மேற்கண்ட விண்ணப்பம் சுயநிதி திட்டத்தின் கீழ் ரூ.500/– செலுத்தி 12.10.2004 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.3 மேற்கண்ட விண்ணப்பம் சர்வே எண்.129/1Aல் ஆழ்துளை கிணறு இல்லை என்று 7.2.2005ல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

2.3 மேல்முறையீட்டாளர் விண்ணப்பம் ரத்து பற்றிய தகவல் தனக்கு 7.2.2005ல் தெரிவிக்கப் படவில்லை என்றும் ஆனால் ஆழ்குழாய் கிணறு அவருடைய நிலத்தில் உள்ளது என்றும் எனவே, தனக்கு மின்இணைப்பு வழங்க உத்தரவு இடவேண்டும் என்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.4 மன்றம் அவருடைய மனுவை தள்ளுபடி செய்துள்ளது. மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. <u>தாமதத்திற்கு மன்னிப்பு</u>

3.1 மேல்முறையீட்டாளரின் மனுவிற்கு மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணை 17.9.2016 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3.2 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 8ன் படி மன்றத்தின் ஆணையில் அதிருப்தியுற்ற முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டை ஆணை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் (அதாவது 16.10.2016குள்) ஆனால், இந்த மேல்முறையீடு தாமதமாக 1.2.2017 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.3 இது சம்பந்தமாக மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதி 8 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“மன்றம் வழங்கிய ஆணையால் பாதிக்கப்பட்ட நபர், அந்த ஆணையை எதிர்த்து ஆணையம் நிர்ணயித்த படிவத்தில் குறிப்பிட்ட விதத்தில் மின்சார குறைதீர்ப்பாளரிடம், ஆணை வழங்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.*

*மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு போதுமான காரணம் இருந்தது என மின்சார குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட முப்பது நாட்களுக்குப் பிறகும் மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ளலாம்.*

*மன்றத்தின் ஆணைப்படி பணம் செலுத்த கோரப்பட்ட எந்த மேல் முறையீட்டாளரும், மன்றம் ஆணையிட்ட தொகையில் இருபத்தைந்து சதவீத தொகையை குறிப்பிட்ட விதத்தில் முன் பணமாக செலுத்தினாலொழிய, மின் குறைதீர்ப்பாளர் எந்த மேல் முறையீட்டையும் ஏற்றுக் கொள்ள மாட்டார். ”*

3.4 மேற்கண்ட விதியின்படி மன்றத்தின் ஆணை பிறப்பிக்கப்பட்ட 30 நாட்கள் கடந்த பின்பு சமர்ப்பிக்கப்படும் எந்த ஒரு மேல்முறையீடுகளையும் காலதாமத்திற்கான காரணம் ஏற்புடையதாக இருப்பின் மின்குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிகிறது.

3.5 இந்த மேல்முறையீட்டாளர் விண்ணப்பதாரர் அவரது மனைவி 26.9.2016ல் காலமாகிவிட்டதால் வாரிசு உரிமை சான்றிதழ் பெற காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதால் தாமதமாக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். எனவே, காலதாமதம் மன்னிக்கப்பட்டு மனு மேல்முறையீட்டு மனு எண்.11/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. <u>மன்றத்தின் தீர்வு:</u>

மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 17.9.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்டுள்ள பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“<u>மன்றத்தின் தீர்வு</u>*
*முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் அவர்களால் மன்றம் கேட்புரையில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில் முறையீட்டாளர் அவர்களின் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த தங்களின் பதிவு எண்.057/2002–2003 சர்வே எண்.129/1A நாள் 11.2.2003*

*ஆழ்துளை கிணறு இல்லாத காரணத்தினால் தங்களது விண்ணப்பம் கடந்த 7.2.2005 ரத்து செய்யப்பட்டது எனவும், தற்போது கருவேலம்பட்டி பகுதி மேற்கு அரசரடி கோட்டத்தில் இருந்து திருமங்கலம் செயற்பொறியாளர் அலுவலகத்துக்கு மாற்றப்பட்டதால் திருமங்கலம் செயற்பொறியாளர் அலுவலகத்தில் மேற்கண்ட சர்வே எண்.129/1க்கு புதியதாக விவசாய விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்கள் சேர்த்து தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விவசாய இணைப்பு வழங்க குறியீடு வரும்பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஆணையிடப்படுகிறது. மேற்கண்ட தீர்வுடன் மனு எண்.18/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை. "*

5. <u>**மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:**</u>

5.1 விவசாய மின்இணைப்பு வேண்டி சமர்ப்பித்த 11.2.2003 நாளிட்ட விண்ணப்பத்தை 7.2.2005ல் ஆழ்துளை கிணறு இல்லை என்று ரத்து செய்துள்ளார்கள். ஆழ்துளை கிணறு சர்வே எண்.129/1A நிலையூர்–II என்ற நிலத்தில் விண்ணப்பம் அளித்த நாள் முதல் இன்று வரை உள்ளது.

5.2 தவறான இடத்தை ஆய்வு செய்துவிட்டு ஒருதலைபட்சமாக அவருக்கு அநீதி இழைத்துள்ளார்கள். ஆய்வு செய்தபொழுது தகவல் தெரிவித்து இருந்தால் ஆழ்துளை கிணற்றை அடையாளம் காட்டியிருப்பார்.

5.3 2005ல் அவரது நிலத்தில் கிணறு இருந்ததற்கான சான்று இணைக்கப்பட்டுள்ளது.

5.4 அவருடைய விண்ணப்பத்தை தள்ளுபடி செய்த தகவல் அவருக்கு தெரியப்படுத்தப் படவில்லை.

6. <u>**எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :**</u>

6.1 மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தாலுகா நிலையூர் பிட் –II கிராமம் சர்வே எண்.129/1Aல் உள்ள நிலத்திற்கு திருமதி. பேச்சியம்மாள் விவசாய மின்இணைப்பு வேண்டி மதுரை மின்

பகிர்மான பெருநகர் வட்டம் செயற்பொறியாளர்/மேற்கு/அரசரடி/மதுரை கோட்டத்தில் வ.எண்.057/02–03 நாள் 11.2.2003 மூலம் பதிவு செய்துள்ளார்.

6.2 மேற்கண்ட நிலத்தில் சர்வே எண்ணில் கு.எண்.செ.பொ/மே/மதுரை/ தொநுஉ/ அ.எண்.352/2005, நாள் 7.2.2005 என்ற குறிப்பாணையின் படி ஆழ்துளை கிணறு இல்லாததால் செயற்பொறியாளர்/மேற்கு/அரசரடி அவர்களால் 7.2.2005 அன்று விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது.

6.3 மேல்முறையீட்டாளர் சர்வே எண்.129/1Aக்கு உள்ள விண்ணப்பம் செய்யும் நேரத்தில் கொடுத்த FMB sketchல் ஆழ்துளை கிணறு கிழக்கே 1Cக்கு அருகில் உள்ளதாக கிராம நிர்வாக அலுவலர் 6.2.2003ல் சான்றளித்துள்ளார். அதே புல எண்ணில் 4.8.2015 கொடுத்த FMB sketchல் மேற்கே சர்வே எண்.131க்கு அருகில் உள்ளதாக கிராம நிர்வாக அலுவலர் சான்றளித்துள்ளார். எனவே, ஆழ்துளை கிணறு இருக்கும் இடம் மாறுபட்டுள்ளது.

6.4 மேல்முறையீட்டாளர் தற்பொழுது நிலையூர் பிட்–II கிராமம், திருமங்கலம் செயற்பொறியாளர் கோட்டப்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதால் திருமங்கலம் செயற்பொறியாளர் அலுவலகத்தில் மேற்கண்ட சர்வே எண்.129/1Aக்கு புதிய விண்ணப்பம் உரிய ஆவணங்கள் சேர்த்து பதிவு செய்யும் பட்சத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விவசாய மின்இணைப்பு வழங்க குறியீடு வரும்பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

7.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.4.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு. M. அய்யரு அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

7.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. R. முத்துராமலிங்கம், உதவிசெயற்பொறியாளர்/கப்பலூர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

## 8. <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 மேல்முறையீட்டாளர் ஆழ்துளை கிணறு தன்னுடைய நிலத்தில் விண்ணப்பம் செய்த நாளிலிருந்த தற்பொழுது வரை உள்ளது என்று வாதிட்டார். மேலும், 4.8.2015ல் கிராம நிர்வாக அலுவலர் அளித்த சான்றையும் விண்ணப்பம் பதியும் பொழுது உள்ள சான்றையும் சுட்டிக்காட்டி வாதிட்டார்.

8.3 எதிர்மனுதாரர் தவறுதலாக வேறு நிலத்தை ஆய்வு செய்து விட்டு ஆழ்துளை கிணறு இல்லை என்று விண்ணப்பத்தை தள்ளுபடி செய்துள்ளார்கள் என்றும் வாதிட்டார்.

8.4 மேலும், தன்னுடைய விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்ற 7.2.2005 நாளிட்ட அறிவிப்பு தனக்கு வழங்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

8.5 மேலும், தன்னுடைய விவசாய விண்ணப்பம் தாட்கோ துரித மின்இணைப்பு திட்டத்தின் கீழ் முன்னுரிமை பெற மின்சார வாரியத்தில் 11.2.2003ல் பதிவு செய்யப்பட்ட மின்இணைப்பு விண்ணப்பம் வாரிசுதாரின் பெயரில் மாற்றம் செய்து தகவல்களை அளிக்க வேண்டியது உள்ளதால் மேற்கண்ட விண்ணப்பத்திற்கு பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

## 9. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

9.1 திரு. கே. முத்துராமலிங்கம், உதவி செயற்பொறியாளர்/கப்பலூர் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

9.2 மேற்கண்ட நிலத்தில் ஆழ்துளை கிணறு இல்லை என்று மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் 7.2.2005ல் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து மேல்முறையீட்டாளரின் வேண்டுகோள் ஏற்புடையது அல்ல என்று தெரிவித்தார்.

9.3 மேலும், சர்வே எண்.129/1Aக்கு விண்ணப்பம் செய்த காலத்தில் சமர்ப்பித்த FMB sketchல் ஆழ்துளை கிணறு சர்வே எண். 131க்கு அருகில் உள்ளதாக கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார். ஆனால், 4.8.2015ல் சமர்ப்பித்துள்ள FMB sketchல் கிழக்கே சர்வே எண்.129/1Cக்கு அருகில் ஆழ்துளை கிணறு உள்ளதாக சான்று அளிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆழ்துளை கிணறு உள்ளது என்ற தகவலில் முரண்பாடு உள்ளது என்றும் வாதிட்டார்.

9.4 மேலும், 7.2.2005ல் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது என்ற அறிவிப்பின் நகல் 11 வருடங்கள் கடந்து விட்டதால் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

9.5 மேலும், 15.5.2007 நாளிட்ட கடிதத்தில் செயற்பொறியாளர் திருமங்கலம் அவர்கள் பல வருடங்கள் ஆனதால் செயற்பொறியாளர்/மேற்கு அரசரடி அவர்களின் அலுவலக பதிவேட்டின் நகல் மட்டும் தான் உள்ளது என்று தெரிவித்து அதன் நகலை சமர்ப்பித்துள்ளார்.

9.6 மேலும், 3.7.2017 நாளிட்ட கடிதத்தில் 6.2.2003ல் சமர்ப்பித்துள்ள FMB sketchன் நகலையும் 4.8.2015 சமர்ப்பித்த FMB Sketchன் நகலையும் அளித்து மேற்கண்ட சர்வே எண்ணில் காட்டியுள்ள ஆழ்குழாய் கிணறு உண்மைதன்மை இல்லை என்று வாதிட்டுள்ளார்.

## 10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

10.1 இருதரப்பு வாதங்களையும் கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாவாக தெரிவது.

(i) இந்த மேல்முறையீட்டாளரின் மனைவி பெயரில் பதிவாகி உள்ள விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பது ஏற்புடையதா ?

(ii) இந்த மேல்முறையீட்டாளரின் மனைவி பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்திற்கு அவரின் விண்ணப்ப முன்னுரிமைப்படி மின்இணைப்பு வழங்கலாமா ?

**11. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**11.1** எதிர்மனுதாரர் கடித எண்.செ.பொ/மே/மதுரை/தொ.நு.உ/அ.எண்.352/2005 நாள் 7.2.2005ன் படி ஆழ்துளை கிணறு இல்லாததால் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதற்கு ஆதாரமாக செயற்பொறியாளர்/மேற்கு/அரசரடி அலுவலகத்தின் விண்ணப்ப பதிவேட்டின் சம்பந்தப்பட்ட பக்கத்தின் நகலை சமர்ப்பித்துள்ளார்.

**11.2** மேலும், விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் பொழுது கொடுத்த FMB sketchல் ஆழ்துளை கிணறு மேற்கே சர்வே எண்.131க்கு அருகில் உள்ளதாக கிராம நிர்வாக அலுவலர் 6.2.2003ல் சான்று அளித்துள்ளார். ஆனால், 4.8.2015ல் கொடுக்கப்பட்டுள்ள FMB sketchல் கிழக்கே சர்வே எண்.129/1cக்கு அருகில் உள்ளதாக கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார். எனவே, ஆழ்துளை கிணறு உள்ள இடம் மாறுபட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார்.

**11.3** எதிர்மனுதாரர்கள் தவறான இடத்தை ஆய்வு செய்துவிட்டு ஒருதலை பட்சமாக விண்ணப்பத்தை ரத்து செய்ததாக அறிவித்துள்ளார்கள். விண்ணப்பம் அளித்த நாள் முதல் இன்றுவரை ஆழ்துளை கிணறு சர்வே எண்.129/IA என்ற நிலத்தில் உள்ளது என்று மேல்முறையீட்டாளர் வாதிட்டுள்ளார். மேலும், சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களின் சான்றுகள் தன்னுடைய வாதத்திற்கு ஆதாரம் என்று வாதிட்டுள்ளார். மேலும், விண்ணப்பம், ரத்து செய்யப்பட்டது என்ற 7.2.2005 அறிவிப்பு அவருக்கு வழங்கப்படவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

**11.4** இந்த வழக்கில் ஆழ்துளை கிணறு ஆய்வின் பொழுது 129/IA என்ற சர்வே எண்ணில் இல்லை என்பதால் விண்ணப்பம் இரத்து செய்யப்பட்டுள்ளது என்று வாதிடப்பட்டுள்ளது. அதற்கு

ஆதாரமாக விண்ணப்ப பதிவேட்டில் உள்ள பதிவு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த விண்ணப்ப பதிவேட்டின் சம்பந்தப்பட்ட பக்க எண்.92ல் வரிசை எண்.57ல் உள்ள அந்த பதிவுஏட்டில் உள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"*<u>க.எண்.செ.பொ/மே/மது/தெ.நு.உ/கோ.விவ/352/05 dt.7.2.2005</u>*

*பார்வையில் கண்டுள்ள கடிதத்தின் படி புல எண். ஆழ்துளை கிணறு (or) கிணறு இல்லாததால் விண்ணப்பம் ரத்து செய்யப்படுகிறது*"

**11.5** மேலும், மேற்கண்ட பதிவின் கீழே யாருடைய கையொப்பமும் இல்லை. எனவே, மேற்கண்ட பதிவு unauthenticated பதிவு ஆக கருதப்படுகிறது. மேலும், மேற்கண்ட கடிதத்தின் அலுவலக நகல் (o/c) எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, அந்த நிலத்தில் எப்பொழுது யாரால் ஆய்வு செய்யப்பட்டது என்ற தகவல் இல்லை. மேலும், ஆய்வின் பொழுது விண்ணப்பதாரர் உடன் இருந்தாரா ? அவருக்கு மேற்படி கடிதம் சார்வு செய்யப்பட்டுள்ளதா என்பதற்கும் எந்த சான்றுகளையும் எதிர்மனுதாரர் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், கடிதம் யாருக்கு விலாசமிடப்பட்டுள்ளது என்ற தகவலும் இல்லை.

**11.6** மேலும், மேற்கண்ட விண்ணப்ப பதிவேட்டின் **92** பக்கத்தில் (துயார் நிலையை பதிவு செய்யும்) **30** நாள் அறிவிப்பு RSFS Rs.**25,000/-** திட்டத்தில் **9.9.2004** அன்று அனுப்பப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், (RSFS) சுயநிதி திட்டத்தின் கீழே விண்ணப்பத்தை பதிவு செய்ய ரூ.**500/-** ஐ **12.10.2004**ல் PCB No.**222408** dt.**12.10.2004** ரசீது மூலம் செலுத்தியுள்ளார். ஆனால், அவ்வாறு சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு ஆகுவதற்கு முன்பாக **9.9.2004** அன்று **30** நாள் அறிவிப்பு சுயநிதி திட்டம் ரூ.**25000/-** திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது என்பது ஏற்புடையது அல்ல.

11.7 மேற்கண்ட நிலையில் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை உறுதிபடுத்த முடியாத நிலையில் மேல்முறையீட்டாளருக்கு அந்த தகவல் அனுப்பப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

11.8 மேலும், எதிர்மனுதாரர் சர்வே எண்.129/1Aக்கு விவசாய மின்னிணைப்பிற்கு விண்ணப்பம் செய்யும் நேரத்தில் கொடுத்த FMB sketchல் ஆழ்துளை கிணறு மேற்கே சர்வே எண்.131ற்கு அருகில் உள்ளதாக கிராம நிர்வாக அலுவலர் 6.2.2003ல் சான்று அளித்துள்ளார். ஆனால், அதே புல எண்ணில் 4.8.2015ல் கொடுத்த FMB sketchல் கிழக்கே சர்வே எண்.129/1Cக்கு அருகில் உள்ளதாக கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார். எனவே, ஆழ்துளை கிணறு இருக்கும் இடம் மாறுபட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார். அதற்கு ஆதாரமாக சம்பந்தப்பட்ட FMB Sketchன் நகல்களை சமர்ப்பித்துள்ளார். அவற்றில் எதிர்மனுதாரர் வாதிடுவது போல்தான் ஆழ்துளை கிணறு Mark செய்யப்பட்டுள்ள இடம் மாறுபட்டுள்ளது.

11.9 ஆனால், 20.9.2004 நாளிட்ட கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் சான்றிட்ட FMB மற்றும் 8/15 நாளிட்ட FMB sketchலும் ஆழ்துளை கிணறு இருக்கும் இடம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது 129/1C என்ற புல எண் உள்ள இடத்திற்கு அருகில்தான். எனவே, மொத்தம் உள்ள மூன்று FMB Sketchகளில் 20.9.2004 மற்றும் 4.8.2015 நாளிட்ட FMB sketch களில் ஆழ்துளை கிணறு 129/1C என்ற புல எண்ணிற்கு அருகில் காட்டப்பட்டுள்ளது. ஆனால், 6.2.2003ல் கிராம நிர்வாக அலுவலர் அளித்த FMB Sketchல் மட்டும் சர்வே எண்.131 என்ற இடத்தில் அருகில் காட்டப்பட்டுள்ளது. ஆனால், எல்லா FMB Sketch மற்றும் சான்றிதழ்களிலும் ஆழ்குழாய் கிணறு 129/1A என்ற சர்வே எண்ணில் உள்ளது என்றுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கிராம நிர்வாக அலுவலரின் சான்றுகளின்படி 129/1A என்ற சர்வே எண்ணில் ஒரு ஆழ்குழாய் கிணறு உள்ளது என்பது மாறுபடவில்லை. ஆனால், ஆழ்குழாய் கிணற்றை Mark செய்த இடம் ஒரு சான்றிதழின்படி மட்டும் மாறுபட்டுள்ளது.

11.10 மேற்கண்ட பத்திகளில் உள்ள தகவல்களின்படி மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பம் ஆழ்துளை கிணறு மேற்படி புல எண் 129/1A இல் ஆய்வின்பொழுது இல்லை என்பதால் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்ற தகவல் மேல்முறையீட்டாளருக்கு 7.2.2005 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்ய முடியவில்லை என்பதாலும் கிராம நிர்வாக அலுவலரின் 6.2.2003, 20.9.2004 மற்றும் 4.8.2015 நாளிட்ட சான்றுகளின்படி சர்வே எண்.129/1Aல் ஆழ்துளை கிணறு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு இருப்பதால் ஆழ்துளை கிணறு இல்லை என்று 7/2/2005ல் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பது ஏற்புடையதாக இல்லை. எனவே, மேல்முறையீட்டாளரின் மனைவியின் பெயர் பதிவு செய்யப்பட்ட விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது தவறு என்று தீர்வு செய்யப்படுகிறது.

12. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

12.1 என்னுடைய வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் மனைவியின் பெயரில் பதிவாகியுள்ள விவசாய மின்இணைப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை ரத்து செய்தது தவறு என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்த விண்ணப்பம் அதன் பதிவு மூப்பின்படி விவசாய மின் இணைப்பு பெற தகுதி உள்ளதாகும். எனவே, அந்த விண்ணப்பத்திற்கு அதன் பதிவு மூப்பின்படி மின்இணைப்பு வழங்கலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது. விண்ணப்பதாரர் இறந்துவிட்டதால் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து விண்ணப்பத்தில் பெயர் மாற்றம் செய்து கொள்ள வேண்டும் என்பதும் தெரியப்படுத்தப்படுகிறது.

13. <u>முடிவுரை</u>

13.1 மேற்கண்ட பத்தி 11ல் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் மனைவியின் பெயரில் பதிவாகியுள்ள விவசாய விண்ணப்ப பதிவு எண். செ.பொ/மே/மது/057/02–03 நாள் 11.2.03 ஐ ரத்து

செய்தது தவறு என்பதால் மேற்கண்ட விண்ணப்பத்திற்கு அதன் பதிவு மூப்பின்படி விவசாய மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.11/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது.

செலவு தொகை இல்லை.

**(ஆ.தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திரு. M. அய்யரு,
த/பெ மொட்டையன்,
1C, மைனர் தோப்பு,
தெற்கு தெரு, பழங்கா நத்தம்,
மதுரை – 3

2) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே. புதூர், மதுரை – 625 007.

3) செயற் பொறியாளர்/இ&ப/திருமங்கலம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
கே. புதூர், மதுரை – 625 007.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.